**தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டம் -2021**

தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரை 2.09(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேடு என்பவற்றின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கு வசதியளிப்பதற்காக SLPA இன் தற்போதைய பணிமனை கட்டிடம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் தேசிய துறைமுக பிரதான திட்டத்தை பின்பற்றி துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தயார்படுத்துவதற்கு SLPA ஆதரவு அளிக்கிறது. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.08 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.11 மில்லியனாக உள்ளதுடன் அது ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படவதற்கு உடன்பாடு காணப்பட்டது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2021 செப்தெம்பர் 09 இல் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 யூன் 05 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய தரப்பு குறித்து சரியான புரிந்துகொள்ளல் காணப்படவில்லை, மேலும் ADB அதிகாரிகளின் தெளிவுபடுத்தல் படிவத்தின் பிரகாரம் அறிக்கையை தயார் செய்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் அனுப்பப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | |
| பணிமனை கட்டிட வளாகத்தின் நிர்மாணம் | 28 | 12 | 2021 திசெம்பர் 31 இன் இறுதியில் சுமார் 28 சதவீத பணிகளை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாதாந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஏறத்தாழ 12 சதவீதத்தை மாத்திரமே பூர்த்தி செய்ய முடிந்தது. | குறைந்த முன்னேற்றத்திற்கான காரணங்கள் பின்வருமாறுள்ளன.<br>(i) தளத்தை ஒப்படைப்பதில் தாமதம் - RDA ஆல் இந்த முக்கியமான காணித் துண்டை 2022.01.04 இல் விடுவிக்க முடிந்தது, அதாவது செயற்திட்டம் தொடங்கி கிட்டத்தட்ட நான்கு (04) மாதங்களுக்குப் பின்னராகும்.<br>(ii) PAEH ஒப்பந்ததாரரால் அங்கீகரிக்கப்படாத PAEH வடிவமைப்பு மாற்றப்பட்டது. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதத்திற்கு ஏதேனும் சரியான காரணம் இருந்தால் அது சம்பந்தப்பட்ட அதிகாரியின் அங்கீகாரத்துடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| பணிமனை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அமைச்சரவை நியமித்த பெறுகை குழுவின் அங்கீகாரம் 2017 யூன் 04 இல் பெறப்பட்டது. எனினும், 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தாமதத்துடன் தொடர்புடைய நிர்மாணத்திற்காக 2020 யூன் 24 இல் சர்வதேச கேள்வி கோரப்பட்டது. மேலும், ஒரு வருட கேள்வி செயன்முறைக்குப் பின்னர் ஒப்பந்ததாரருக்கு 2021 யூலை 27 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் இச்செயற்பாட்டிற்கு 04 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் எடுத்தமையால், கடனுக்கான வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் உள்ளீட்டு விலைகள் அதிகரிப்பு என்பன சிக்கனமற்ற முறையில் செயற்திட்டத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | பணிமனை கட்டிட செயற்திட்டத்திற்கான CAPC ஆனது SLPA இற்கு 2017 யூன் 04 இல் அங்கீகாரம் வழங்கியது, இலங்கை அரசாங்கம் (GOSL) ADB உடன் 2019 சனவரி 17 இல் கடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தைகள் உட்பட பெறுகை வழிகாட்டலைப் பின்பற்றுவதற்கு, ஒப்பந்தத்தை வழங்குவதற்கு கணிசமான கால அவகாசம் எடுக்கப்பட்டிருந்தது. | தேவையற்ற காலதாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்களை நிர்ணயிப்பதன் மூலம் நடவடிக்கைகள், இலக்கு காலப்பகுதி, பௌதீக மற்றும் நிதி இலக்குகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக, அனைத்து செயற்திட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுவான செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தப்பட்ட செயற்திட்டப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு ஏனைய தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுக்கு அனுப்புவதற்காக SLPA முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது. | மீளாய்வாண்டிற்கான இலக்குகள் மற்றும் அடைந்துகொள்ளல்களை அளவிடுவதற்கு ஒரு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |